









# நடப்பு நிகழ்வுகள்

## ஏப்ரல் 2, 2022

# சர்வதேசம்

## ரஷ்யாவிடம் கச்சா எண்ணை கொள்முதல் தொடரும்

### சுருக்கம்:



- இந்தியாவின் ஒட்டுமொத்த நலனை கருத்தில் கொண்டே, ரஷியாவிடமிருந்து சலுகை விலையில் எண்ணெய் வாங்குவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருவதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- நமது எரிபொருள் பாதுகாப்பே நமக்கு அனைத்தையும் விட முக்கியம். சலுகை விலையில் எரிபொருள் கிடைக்கும்

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- இந்தியாவின் ஒட்டுமொத்த நலனை கருத்தில் கொண்டே, ரஷியாவிடமிருந்து சலுகை விலையில் எண்ணெய் வாங்குவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருவதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- நமது எரிபொருள் பாதுகாப்பே நமக்கு அனைத்தையும் விட முக்கியம். சலுகை விலையில் எரிபொருள் கிடைக்கும் போது, ஏன் அதனை நாம் வாங்கக் கூடாது? நாம் ரஷியாவிடமிருந்து எரிபொருள் வாங்க ஆரம்பித்துவிட்டோம்.
- ஒரு சில பேரல்கள் இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இன்னும் 3 – 4 நாள்களில் விநியோகம் தொடங்கும், பிறகு இது தொடரும். இந்த முடிவு, இந்தியாவின் ஒட்டுமொத்த நலனையும் கருத்தில் கொண்டுதான் எடுக்கப்பட்டுள்ளது” .
- உக்ரைன் மீது ரஷியா போர் தொடுத்துள்ள நிலையில், அந்நாடு மீது அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்துள்ளது.
- இதனையும் மீறி ரஷியாவிடம் இருந்து சலுகை விலையில் கச்சா எண்ணெய் கொள்முதல் செய்ய இந்தியா முடிவு செய்துள்ளது. இதற்கு அமெரிக்கா விமர்சனங்கள் முன்வைத்திருந்த நிலையில், இந்தியா மேற்கண்ட பதிலை அளித்துள்ளது.

## ரஷிய நாணயத்தில் எரிவாயு வாங்காவிட்டால் ஒப்பந்தங்கள் ரத்து

### சுருக்கம்:



- ரஷிய நாணயமான ரூபிளைக் கொண்டுதான் எரிவாயு வாங்க வேண்டும், அப்படி செய்யாவிட்டால் ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்படும் என உலக நாடுகளுக்கு விளாடிமிர் புதின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
- ரஷிய வங்கிகளில் சிறப்பு கணக்கு தொடங்கப்படும், அவற்றின்மூலம் வெளிநாட்டு பணம், ரூபிளாக மாற்றப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- புதின் குறிப்பிடுகையில், "யாரும் எங்களுக்கு இலவசமாக தரவில்லை. நாங்கள் தொண்டு செய்யவும் போவதில்லை. எனவே ஒப்பந்தங்கள் நிறுத்தப்படும்" என கூறி உள்ளார்.
- ஜெர்மனி, இத்தாலி போன்ற ஐரோப்பிய நாடுகள், ரஷ்யாவின் எரிவாயுவை பெரிய அளவில் நம்பி உள்ளன.

- உக்ரைன் மீது படையெடுத்துள்ள ரஷியா மீது மேற்குலக நாடுகள் பல்வேறு தடைகளை வதித்துள்ளன. இதற்கு பதிலடியாக, ரஷியாவிடமிருந்து வாங்கப்படும் எரிவாயுவுக்கு ரஷிய செலாவணியான ரூபிள் மட்டுமே அளிக்க வேண்டும் என அந்நாட்டின் அதிபர் புதின் வலியுறுத்தியிருந்தார்.
- பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு செய்தியாளர்களிடம் பேசிய மேக்ரான், "ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டபடி ரஷியா செயல்படவில்லை.
- எரிவாயுவை வாங்கும் ஐரோப்பிய நாடுகள் யூரோவில் மட்டுமே அதை வாங்க வேண்டும். எனவே, புதின் கோரிக்கையை நிறைவேற்றுவது சாத்தியமில்லை. ஒப்பந்தத்திலும் அப்படி போடவில்லை.

## உக்ரைன் போருக்கு விரைவில் முடிவு

### சுருக்கம்:



- உக்ரைன் போருக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்தியா வந்துள்ள ரஷிய வெளியுறவுத் துறை அமைச்சர் செர்கேய் லாவ்ரோவிடம் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார்.
- உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளது. அந்த நாட்டின் விமானப்படை, கடற்படை, ராணுவ தளங்கள் மற்றும் ஆயுத கிடங்குகளை குறிவைத்து ரஷ்ய போர் விமானங்கள் குண்டுமழை பொழிந்து வருகின்றன. ஏவுகணை தாக்குதலும் நடத்தப்படுகிறது.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- சோவியத் யூனியன் உடைந்தபோது, கடந்த 1991-ம் ஆண்டில் உக்ரைன் தனி நாடாக உதயமானது. அதன்பிறகும் ரஷ்யாவின் நெருங்கிய நட்பு நாடாக உக்ரைன் நீடித்தது.
- கடந்த 2014-ம் ஆண்டில் ரஷ்யாவுடனான உறவை துண்டித்த உக்ரைன், ஐரோப்பிய ஒன்றியத்துடன் நட்பு பாராட்டியது. அப்போது முதல் ரஷ்யா, உக்ரைன் இடையே மோதல் நீடித்து வருகிறது.
- சோவியத் யூனியன் உடைந்தபோது, கடந்த 1991-ம் ஆண்டில் உக்ரைன் தனி நாடாக உதயமானது. அதன்பிறகும் ரஷ்யாவின் நெருங்கிய நட்பு நாடாக உக்ரைன் நீடித்தது. கடந்த 2014-ம் ஆண்டில் ரஷ்யாவுடனான உறவை துண்டித்த உக்ரைன், ஐரோப்பிய ஒன்றியத்துடன்
- நட்பு பாராட்டியது. அப்போது முதல் ரஷ்யா, உக்ரைன் இடையே மோதல் நீடித்து வருகிறது.
- கடந்த 22-ம் தேதி உக்ரைனின் டான்ஸ்க், லாஹன்ஸ்க் மாகாணங்களை தனி நாடுகளாக ரஷ்யா அங்கீகரித்தது.
- மாகாணங்களுக்குள் ரஷ்ய படைகளும் நுழைந்தன. இதனால், உக்ரைனில் போர்ப் பதற்றம் ஏற்பட்டது. உக்ரைன் மீது ராணுவ நடவடிக்கை எடுக்க அதிபர் விளாடிமிர் புதினுக்கு அந்நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தது.

# நேபாள பிரதமர் ஷேர் பகதூர் தியூபா இந்தியா வருகை

## சுருக்கம்:



- இந்தியா – நேபாளம் இடையே ரயில் போக்குவரத்தை பிரதமர் நரேந்திர மோடியும் பிரதமர் ஷெர் பகதூர் தேவ்பாவும் தொடங்கி வைத்தனர். அத்துடன் இரு நாடுகளுக்கு இடையிலான பல்வேறுஒப்பந்தங்களில் கையெழுத் திட்டனர்.
- இந்தியாவுக்கு வருகை தர வேண்டும் என்று நேபாள பிரதமர் ஷெர் பகதூர் தேவ்பாவுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்திருந்தார்.
- . இந்தியா – நேபாளம் இடையே வர்த்தகத்தை அதிகரிக்கவும், தொடர்புகளை அதிகரிக்கவும் பிரதமர் தேவ்பாவும் நானும் ஒப்புக் கொண்டுள்ளோம். நேபாளத்தில் இந்திய நிறுவனங்கள் நீர்மின் நிலையங்கள் அமைக்க ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. நேபாளத் தின் அமைதி, செழிப்பு, வளர்ச்சியில் இந்தியா உறுதியான நண்பனாக உள்ளது. இந்திய – நேபாள நட் புறவை மேம்படுத்துவதில் பிரதமர் தேவ்பாவின் பங்கு மிகப் பெரியது.

## முக்கிய சிறப்பம்சங்கள்:

- நேபாள பிரதமர் ஷெர் பகதூர் தேவ்பா 3 நாள் பயணமாக இந்தியா வந்தார். டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து தேவ்பா நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார்.
- டெல்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் உயர் மட்ட அளவில் இருவரும் பேச்சுவார்த்தை நடத்தினர்.
- இரு நாட்டு தலைவர்கள் சந்திப்பின் போது ரயில்வே, எரிசக்தி உட்பட 4 முக்கிய துறைகளில் இரு நாடுகளுக்கு இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அவற்றில் பிரதமர் மோடியும் பிரதமர் தேவ் பாவும் கையெழுத்திட்டனர்.
- நேபாளத்தில் இந்தியா கட்டமைத்துள்ள 'சோலு காரிடார' 132 கிலோவாட் மின் பகிர்மான திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். சர்வதேச மின்சக்தி கூட்டமைப்பிலும் நேபாளம் இணைந்து கொண்டது.
- பிஹார் மாநிலம் ஜெய்நகரில் இருந்து நேபாளத்தின் குர்தா பகுதி வரையிலான ரயில் போக்குவரத்தை இரு நாட்டு பிரதமர்களும் நேற்று தொடங்கி வைத்தனர். நேபாளத்தில் ரூபே பணப் பரிமாற்ற சேவையைப் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இதன் மூலம் இந்தியாவின் நிதி தொடர்பு புதிய மைல் கல்லை எட்டியுள்ளது.
- இந்தியாவுடனான நேபாளத்தின் நட்புறவு மிகமிக முக்கியமானது. நேபாளம் மற்றும் நேபாள மக்கள் மீது நீங்கள் வைத்துள்ள அன்பை கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எனது இந்திய பயணம் அந்த நட்புறவை மேலும் அதிகரிக்கும் .
- இந்தியா – நேபாளம் இடையே உள்ள உறவு தனித்துவமானது. உலகின் வேறு எந்தப் பகுதியிலும் இதுபோன்ற நட்புறவை பார்க்க முடியாது
-
- சர்வதேச மின்சக்தி கூட்டமைப் பில் நேபாளம் உறுப்பினரானது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இதன் மூலம் நமது பிராந்தியத்தில் நீடித்த, சுற்றுச்சூழல் மாசு ஏற்படுத்தாத எரிசக்தி வளர்ச்சி அடையும். நேபாளத்தில் இந்திய நிறுவனங்கள் நீர்மின் நிலையங்கள் துறையில் அதிகமாக ஈடுபட ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.
- உபரியாக உள்ள மின்சாரத்தை இந்தியாவுக்கு நேபாளம் வழங்கி வருவது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. இது நேபாளத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமாக இருக்கும்.

# குடியரசு தலைவர் கோவிந்த துர்க்மெகிஸ்தான் பயணம்

## சுருக்கம்:



- வளங்கள் நிறைந்த மத்திய ஆசிய நாட்டுடனான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து விவாதிப்பதற்காக ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் துர்க்மென் ஜனாதிபதி செர்தார்பெர்டிமுஹமடோவை சந்தித்தார். துர்க்மெனிஸ்தானுக்கு இந்திய ஜனாதிபதியின் முதல் பயணம் இதுவாகும்.
- குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தனது மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக துர்க்மெனிஸ்தானுக்கு சென்றார்
- துர்க்மென் ஜனாதிபதி செர்தார் பெர்டிமுஹமடோவைச் சந்தித்து வளங்கள் நிறைந்த மத்திய ஆசிய நாடுகளுடன் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான வழிகளைப் பற்றி விவாதிப்பார்.

## முக்கிய சிறப்பம்சங்கள்:

- சுதந்திர துர்க்மெனிஸ்தானுக்கு இந்திய ஜனாதிபதியின் முதல் வருகை இதுவாகும் மற்றும் புதிய துர்க்மென் ஜனாதிபதி பெர்டிமுஹமடோவ் பதவியேற்ற பிறகு இது வருகிறது.
- "ஜனாதிபதி கோவிந்த் தனது இரு நாட்டுப் பயணத்தின் முதல் பாகமாக அஷ்கபாத் வந்தடைந்தார். துர்க்மென் பாரம்பரியத்தின்படி, ஜனாதிபதிக்கு விமான நிலையத்தில் குழந்தைகள் ரொட்டி மற்றும் உப்பு வழங்கப்பட்டது".
- துர்க்மெனிஸ்தானுடனான உறவுகளுக்கு இந்தியா முக்கியத்துவம் அளித்து வருவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- "ஜனாதிபதியின் அரசுப் பயணம், இருதரப்பு மட்டுமன்றி, இந்தியா–மத்திய ஆசியா கூட்டுறவில் நமது விரிவாக்கப்பட்ட அண்டை நாடுகளின் கருத்து மற்றும் பங்கு ஆகியவற்றின் அடிப்படையில் துர்க்மெனிஸ்தானுக்கு நாம் அளிக்கும் முக்கியத்துவத்தை மீண்டும் உறுதிப்படுத்தும்" என்று MEA இன் மேற்கு செயலாளர் சஞ்சய் வர்மா கூறினார்.
- "துர்க்மெனிஸ்தான் மூலோபாய ரீதியாக மத்திய ஆசியாவில் வைக்கப்பட்டுள்ளது மற்றும் இணைப்பு என்பது துர்க்மெனிஸ்தானுடனான கூட்டு ஈவுத்தொகையை வழங்கும்.
- துர்க்மெனிஸ்தான்–ஆப்கானிஸ்தான்–பாகிஸ்தான்–இந்தியா (TAPI) பைப்லைன் பிரச்சினை பேச்சுவார்த்தையின் போது வரலாம். துர்க்மென் தலைமையுடனான ஜனாதிபதியின் பேச்சுவார்த்தையில் ஆப்கானிஸ்தான் இடம்பெறும் என்றும் கூறினார்.

# தேசிய செய்திகள்

## ஸ்ரீரங்கம் கோவிலுக்கு 'யுனெஸ்கோ' அங்கீகாரம்

### சுருக்கம்:



- 'யுனெஸ்கோ' அங்கீகாரம் பெறுவதற்கான பட்டியலில், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலும், பஞ்சாப் மாநிலம், அமிர்தசரஸ் பொற்கோவிலும் இடம் பெற்றுள்ளதாக, மத்திய கலாசார அமைச்சம் தெரிவித்துள்ளது.
- உலக அளவில் பாரம்பரிய, கலாசார இடங்களை கண்டறிந்து, அதை யுனெஸ்கோ அமைப்பு அடையாளப்படுத்தி வருகிறது

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- பூலோக வைகுண்டம் என்ற சிறப்பு பெற்றதும், 108 வைணவ திருத்தலங்களில் முதன்மையானதுமான ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவில், ஆன்மிகம், சுற்றுலா மற்றும் புராதன முக்கியத்துவம் கொண்ட சிறப்புடையதாகும். ழிபாட்டுக்குரிய சன்னதிகள் 36 ஏக்கர் பரப்பளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- 7 பிரகாரங்கள், 21 கோபுரங்கள், 54 சன்னதிகள் கொண்ட பிரமாண்டமான இக்கோவில் பல ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. ஸ்ரீரங்கத்தின் முக்கிய வீதிகளுடன் ஊரே கோவிலுக்குள் அடக்கம் என்ற சிறப்பும் இக்கோவிலுக்கு பொருந்தும்.
- இந்தியாவில் உள்ள பாரம்பரிய இடங்களை, மத்திய அரசின் கலாசார அமைச்சகம் பட்டியலிட்டு, யுனெஸ்கோ அங்கீகாரம் பெற முயற்சி மேற்கொண்டு வருகிறது.
- சென்னை, மேற்கு மாம்பலத்தை சேர்ந்தவர் ஜெகன்நாத் சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர். இவர், தொடர் ஆய்வுகள் மேற்கொண்டு இந்தியாவின் கலாசாரம், பாரம்பரியத்தை பறைசாற்றும் 25 இடங்களை பட்டியலிட்டார்.
- அவற்றுக்கு யுனெஸ்கோ அங்கீகாரம் பெற, மத்திய கலாசார அமைச்சகத்திற்கு அனுப்பி வைத்தார். அதற்கு மத்திய கலாசார அமைச்சகம், அவருக்கு பதில் அனுப்பியுள்ளது.
- இந்தியாவின் கலாசாரம், பாரம்பரியத்தை பறைசாற்றும் இடங்கள் குறித்து ஆய்வு செய்தேன். சென்னை உயர் நீதிமன்ற பாரம்பரிய கட்டடங்கள், கொல்லிமலை, திருச்சி ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவில், கடலூர் பண்ருட்டியில் உள்ள திருவதிகை கோவில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில்.மதுரை மீனாட்சியம்மன் கோவில், திருவட்டாறு ஆதிகேசவ பெருமாள் கோவில், சென்னை மயிலாப்பூர் திருவள்ளுவர் கோவில், பஞ்சாப் மாநிலம், அமிர்தசரஸ் பொற்கோவில் உள்ளிட்ட 25 இடங்களின் விபரங்களுடன், யுனெஸ்கோ அங்கீகாரம் பெற விண்ணப்பிக்கலாம்

## சண்டிகரை இணைப்பதற்கான தீர்மானம் பஞ்சாப் சட்டப்பேரவையில் நிறைவேற்றம்

### சுருக்கம்:



- பஞ்சாப் மாநிலத்துடன் சண்டிகரை இணைப்பதற்கான தீர்மானம் அம்மாநில சட்டப்பேரவையில் இன்று நிறைவேற்றப்பட்டது.
- பஞ்சாப் மாநிலத்தில் இருந்து அரியானா தனியாக பிரிக்கப்பட்ட போது, இரு மாநிலங்களுக்கும் பொதுவான தலைநகராக சண்டிகர் இருக்கும் என அறிவிக்கப்பட்டது. இதையடுத்து யூனியன் பிரதேசமான சண்டிகரை பஞ்சாப் 60 சதவீதமும் ஹரியானா 40 சதவீதமும் நிர்வகித்து வந்தன.

முக்கிய சிறப்பம்சங்கள்:

- சண்டிகரில் பணியாற்றும் அரசு ஊழியர்கள் அனைவரையும், மத்திய சேவை விதிகளின் கீழ் கொண்டுவரும் அறிவிப்பை, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அண்மையில் வெளியிட்டார். இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த பஞ்சாப் முதல் மந்திரி பகவந்த் மான், 'மத்திய சேவை விதிகளால், சண்டிகர் மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள் சென்றுவிடும் ஆபத்து உள்ளது'
- ண்டிகரை முழுமையாக பஞ்சாபிற்கு மாற்ற வேண்டும் என வலியுறுத்தும் தீர்மானத்தை பஞ்சாப் சட்டப்பேரவையில் ர் பகவத்மான் முன்மொழிந்தார். சிறப்பு சட்டமன்ற கூட்டத்தில் பகவந்த் மான் முன்மொழிந்த தீர்மானம் பாஜகவை தவிர அனைத்து கட்சிகளின் ஆதரவோடு ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.
- சண்டிகரை பஞ்சாப்புடன் இணைக்கும்படி வலியுறுத்தி, பஞ்சாப் சட்டபேரவை சிறப்பு கூட்டத்தில் முதலவர் மான் அதிரடியாக தீர்மானம் நிறைவேற்றி உள்ளார்.
- பஞ்சாப், அரியானா மாநிலங்களின் கூட்டு தலைநகரமாகவும், யூனியன் பிரதேசமாகவும் உள்ள சண்டிகரை, இந்த இருமாநில அரசுகளும் நிர்வாகம் செய்து வருகின்றன.
- இந்த அதிகாரத்தை பறிக்கும் வகையில், யூனியன் பிரதேசம் என்ற வகையில் சண்டிகரில் ஒன்றிய அரசின் பணியாளர் விதிமுறைகள் அமல்படுத்தப்படும் என்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா சமீபத்தில் அறிவித்தார்.
- பஞ்சாப் அரசு அதிர்ச்சி அடைந்தது.இந்நிலையில், சண்டிகரை பஞ்சாப்புடன் உடனடியாக இணைக்கும்படி வலியுறுத்திய முதல்வர் பகவந்த் மான், சட்டபேரவையின் ஒருநாள் சிறப்பு கூட்டத்தை கூட்டினார்.

## உயர்நீதிமன்றங்களில் ஓராண்டில் 27 பெண் நீதிபதிகள் நியமனம்: மத்திய அரசு

சுருக்கம்:



- உச்சநீதிமன்ற கொலீஜியம் கடந்த ஓராண்டில் 39 பெண்களை உயர்நீதிமன்ற நீதிபதிகளாக நியமனம் செய்ய பரிந்துரைத்த நிலையில், அவா்களில் 27 பேர் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்
- மீதமுள்ள 12 பெண்களின் நியமன நடைமுறைகள் பல்வேறு நிலைகளில் உள்ளன என்று மத்திய அரசு சார்பில் மக்களவையில் தெரிவிக்கப்பட்டது.

முக்கிய சிறப்பம்சங்கள்:

- உச்ச நீதிமன்றத்தில் 9 நீதிபதிகள் இடம் காலியாகியுள்ளதையடுத்து, 3 பெண் நீதிபதிகள் உள்பட 9 நீதிபதிகளை உச்ச நீதிமன்றத்தின் மூத்த நீதிபதிகள் அடங்கி கொலிஜியம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.
- 3 பெண் நீதிபதிகளில் ஒருவரான கர்நாடக மாநில உயர் நீதிமன்ற நீதிபதி நாகரத்னா 2027–ம் ஆண்டில் உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக வரக்கூடும். அவ்வாறு தலைமை நீதிபதியாக வந்தால், இந்திய வரலாற்றில் முதல் பெண் தலைமை நீதிபதியாக நாகரத்னா இருப்பார்.
- கடந்த 12–ம் தேதி உச்ச நீதிபதியாக இருந்த ஆர்எப் நாரிமன் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து நீதிபதிகள் எண்ணிக்கை 25 ஆகக் குறைந்தது. 34 நீதிபதிகள் இருக்க வேண்டிய இடத்தில் 25 ஆகச் சரிந்தது.
- கடந்த 2019–ம் ஆண்டு, மார்ச் 19–ம் தேதி ரஞ்சன் கோகோய் ஓய்வு பெற்றுச் சென்றபின் இதுவரை எந்த நீதிபதிகள் நியமனமும் நடக்கவில்லை.

- இந்நிலையில் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி என்.வி. ரமணா, மூத்த நீதிபதிகள் யு.யு.லலித், ஏஎம்கான்வில்கர், டிஒய் சுந்திரசூட், எல் நாகேஸ்வரராவ் ஆகியோர் அடங்கிய கொலிஜியம் 3 பெண் நீதிபதிகள் உள்ளிட்ட 9 நீதிபதிகள் அடங்கிய பரிந்துரையை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது.
- நீதிபதிகள் அல்லாத ஒருவர் மூத்த வழக்கறிஞர், கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல், பிஎஸ் நரசிம்மா உச்ச நீதிமன்ற நீதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- கர்நாடக உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அபெய் ஸ்ரீநிவாஸ், குஜராத் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி விக்ரம் நாத், சிக்கம் உயர் நீதிமன்ற தலைம நீதிபதி ஜிதேந்திர குமார் மகேஸ்வரி, கேரள உயர் நீதிமன்ற நீதிபதி சி.டி.ரவிகுமார், மற்றொரு கேரள நீதிபதி எம்எம் சுந்தரேஷ் ஆகியோர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர்.

## தில்லியை போன்று தமிழகத்திலும் மாதிரிப் பள்ளிகள்

### சுருக்கம்:



- தில்லியைப் போன்று தமிழகத்திலும் மாதிரிப் பள்ளி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது என்று தில்லி அரசின் மாதிரிப் பள்ளியைச் பாா்வையிட்ட முதல்வா் மு.க. ஸ்டாலின் தெரிவித்தாா்.
- மேற்கு வினோத் நகரில் அமைந்துள்ள தில்லி அரசின் ராஜ்கியா சா்வோதயா பால் வித்யாலயா பள்ளிக்கு நேரில் சென்றாா். அவரை துணை முதல்வா் மணீஷ் சிசோடியா வரவேற்றாா்.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- பள்ளியில் உள்ள வகுப்பறைகள், நீச்சல் குளம், பிசினஸ் பிளாஸ்டா்ஸ் திட்டத்தில் ஈடுபட்டுள்ள இளம் தொழில்முனைவு மாணவா்கள் காட்சிப்படுத்தியிருந்த தொழில் அரங்கு ஆகியவற்றை முதல்வா் மு.க. ஸ்டாலின் நேரில் பாா்வையிட்டாா்.
- மாணவ, மாணவியருடன் கலந்துரையாடி பாராட்டி ஊக்குவித்தாா். அவருடன் முதல்வா் அரவிந்த் கேஜரிவால், துணை முதல்வா் மணீஷ் சிசோடியா, பள்ளி முதல்வா் ஜோத்ஸ்னா மின்ஜ் ஆகியோா் உடன் சென்று விவரங்களை எடுத்துக் கூறி விளக்கினா்
- ஆம் ஆத்மி ஆட்சியில் கல்வி முறையில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்து தமிழக முதல்வரிடம் தில்லி அரசின் கல்வித் துறை அதிகாரி விளக்கினாா். அவா்
- தில்லி அரசு கடந்த 6 முதல் 7 ஆண்டுகளாக கல்விக்காக தனது பட்ஜெட்டில் 25 சதவீதத்தை தொடா்ந்து செலவழித்து வருகிறது. 2014-15-ஆம் ஆண்டில் 12-ஆம் வகுப்பில் 88 சதவீத மாணவா்கள் தோ்ச்சி பெற்றிருந்தனா்.
- தனியாா் பள்ளிகளை விட அரசுப் பள்ளிகளின் தோ்ச்சி விகிதம் குறைவாக இருந்தது. இந்த நிலையில், 2019-20-இல் அரசுப் பள்ளிகளில் மாணவா்களின் தோ்ச்சி விகிதம் 98 சதவீதமாக இருந்தது. அதே வேளையில், தனியாா் பள்ளிகளின் தோ்ச்சி விகிதம் 92 சதவீதமாக மட்டுமே இருந்தது’ என்று முதல்வா் ஸ்டாலினிடம் அவா் தெரிவித்தாா்.

## விருதுநகர் மாவட்டத்தில் மெகா ஜவுளி பூங்கா:

### சுருக்கம்:



- விருதுநகர் மாவட்டத்தில் மெகா ஜவுளி பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு ஒன்றிய தொழில் துறை அமைச்சர் பியுஷ் கோயலை சந்தித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.
- தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய வணிகம், தொழில்,நுகர்வோர் விவகாரங்கள்,உணவு, பொது வினியோகம் மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் பியுஷ் கோயலை நேற்று சந்தித்து தமிழகத்தின் வணிகம், தொழில்துறை தொடர்பான கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினார்.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- ஒன்றிய அரசு நாட்டின் பல பகுதிகளில் மெகா ஜவுளி பூங்காக்கள் அமைக்க திட்டமிட்டுள்ளது. ஜவுளி துறையில் தமிழகம் முன்னணி மாநிலம் ஆகும். விருது நகர் மாவட்டம் குமாரலிங்கபுரத்தில் 1052 ஏக்கர் பரப்பளவில் மெகா ஜவுளி பூங்கா அமைப்பதற்கான இடத்தை தமிழக அரசு தேர்வு செய்துள்ளது.
- சிப்காட்டின் கட்டுப்பாட்டில் உள்ள அந்த நிலத்தில் ஜவுளி பூங்கா அமைக்க வேண்டும்.
- மொத்த காலணிகள் உற்பத்தியில் 26 சதவீதமும் சர்வதேச நாடுகளுக்கு ஏற்றுமதியில் தமிழ்நாடு 45 சதவீதமும் பங்கு வகிக்கிறது.
- காலணி உற்பத்தி தொழிலில் புதிய உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்தை செயல்படுத்த வேண்டும். இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டால் உற்பத்தி அதிகரிப்பதோடு, காலணி ஏற்றுமதிக்கான சிறந்த நாடாக இந்தியா உருவாகும்.
- நாட்டில் எலக்ட்ரிக் வாகனங்களின் தேவை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டு மே மாதம் உற்பத்தியுடன் இணைந்த ஊக்க திட்டத்தை ஒன்றிய அரசு அறிவித்தது.
- திட்டத்தில்,ஊக்க தொகை பெறுவதற்கான தகுதியாக எலக்ட்ரிக் வாகனங்களின் திறனை 50 கிகாவாட் அவர்(ஜிடபிள்யுஎச்)ல் இருந்து 100 ஜிடபிள்யுஎச். ஆக உயர்த்த வேண்டிய அவசியம் உள்ளது.
- திருவள்ளூர் மாவட்டம் காமராஜர் துறைமுகம் அருகே தொழிற்சாலைகள் அமைப்பதற்கு 3542 ஏக்கர் உப்பு நிலத்தை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்துக்கு ( டிட்கோ) தருமாறு அரசு கோரிக்கை விடுத்து வருகிறது
- . கடந்த 1999ம் ஆண்டு 1513 ஏக்கர் வழங்கப்பட்ட நிலையில் அதில் டிட்கோ தொழிற்சாலைகள் அமைத்துள்ளது. மீதம் உள்ள 2000 ஏக்கர் நிலத்தையும் கொடுத்தால் நவீன வசதிகளுடன் தொழில் நகரம் உருவாக்கப்படும்.

## 'பாலின நிகர் மேம்பாடு மற்றும் கொள்கை ஆய்வகம்'

### சுருக்கம்:



- நகர்ப்புற மகளிர் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகளை உருவாக்கவும், மகளிர் பாதுகாப்பு திட்டமான நிர்பயா திட்டத்தை கண்காணிக்கவும் மாநகராட்சி சார்பில் "பாலின நிகர் மேம்பாடு மற்றும் கொள்கை ஆய்வகம்" ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் சேவையை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா தொடங்கிவைத்தார்.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- சென்னை மாநகராட்சி சார்பில் பாலின நிகர் மேம்பாடு மற்றும் கொள்கை ஆய்வகம் மற்றும் பயிற்சி கருத்தரங்கம் ரிப்பன் மாளிகை வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா பங்கேற்று கருத்தரங்கை தொடங்கிவைத்தார்
- உலக அளவில் நகர்ப்புற திட்டமிடல் மற்றும் வடிவமைப்பை முடிவெடுப்பதில் பெண்களின் தேவைகளை கருத்தில் எடுக்கப்பட வேண்டும்.
- நகர்ப்புற திட்டமிடலில் பெண்கள் குறைவாகவே பயன்படுத்தப்படுகிறார்கள். அது மட்டுமல்லாது முடிவெடுப்பதில் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதே நிதர்சனமான உண்மை.
- பெண்களுக்கான சமமான வளர்ச்சியினை ஊக்குவிக்க இந்திய நகரங்களின் திட்டமிடல் மற்றும் இதர பாலினங்களின் தேவைக்கான பொது இடங்கள் உருவாக்கப்பட வேண்டும்.
- உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் "சென்னை மாநகர கூட்டமைப்பு திட்டம்" மற்றும் "நிர்பயா" திட்டங்களின் கீழ் சென்னை மாநகராட்சியில் தமிழ்நாடு அரசின் மூலம் "பாலின நிகர் மேம்பாடு மற்றும் கொள்கை ஆய்வகம்" (Gender and Policy Lab) உருவாக்கப்பட்டுள்ளது.
- கடந்த மாதம் முதல் அனுபவம் வாய்ந்த 3 நிபுணர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இதற்கான பணி நடைபெற்று வருகிறது.
- பாலின நிகர் மேம்பாடு மற்றும் கொள்கை ஆய்வகமானது நிர்பயா திட்டத்தை கண்காணிக்கவும், இதற்கு தேவையான கொள்கைள் மற்றும் அதற்கான விழிப்புணர்வை உருவாக்கவும், பொது இடங்கள் மற்றும் பொது போக்குவரத்தை பெண்களுக்கு பாதுகாப்பானதாக்கவும், ஏற்றதாகவும் மாற்றும் வகையில் செயல்படும்.
- அடுத்த 3 ஆண்டுகளில் பல துறைகளில் இதற்கான முயற்சியை செயல்படுத்தும் அமைப்பாகவும் செயல்படும்.

## தாய் சேய் எக்ஸ்பிரஸ் திட்டம்

### சுருக்கம்:

- ஆந்திராவில், பிரச வித்த பெண்கள் தங்கள் பச்சிளம் குழந்தை களுடன் வீடு திரும்பும் இலவச திட்டத்திற்காக, 500 வாகனங்களை ஒப்படைக்கும் விழாவை ஒய்.எஸ்.ஆர்., காங்., தலைவரும், முதல்வரு மான ஜெகன்மோகன் ரெட்டி நேற்று துவக்கி வைத்தார்



### முக்கிய சிறப்பம்சங்கள்:

- ஆந்திராவில், அரசு மருத்துவமனைகளில் பிரசவித்த பெண்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகளை வீட்டில் கொண்டு சேர்க்க, 'ஒய். எஸ்.ஆர்., தாய் – சேய் எக்ஸ்பிரஸ்' என்ற இல வச வாகன சேவை கிட்டம் துவங்கப்பட்டுஉள்ளது.
- இத்திட்டத்தில், மேலும் 500 வாகனங் களை சேர்த்து, மு தல் வடர் ஜெகன்மோகன் ரெட்டி துவக்கி வைத்தார்.
- ஜெகன் பிரசவித்த பெண்கள், தங்கள் பச்சிளம் குழந்தைகளுடன் வீடு திரும்புவதற்கான தாய் – சேய் எக்ஸ்பிரஸ் திட்டத்தில், கூடுதலாக 500 வாகனங்கள் சேர்க்கப்பட்டு உள்ளன.
- ஆந்திராவின் அனைத்து மாவட்டங்களிலும் வசர கால ன்மோகன் பயன்பாட்டிற் ரெட்டி கான மருத்துவ உபகரணங்களும் பொருத்தப்பட்டு உள்ளன.
- கூடுதல் தாய் – சேய் எக்ஸ்பிரஸ் வாகனங்கள் வாயிலாக, இனி ஆண்டுதோறும் நான்கு – லட்சம் தாய் மற்றும் – பச்சிளம் குழந்தைகளுக்கு, சேவை வழங்கப்படும்.

## இறுதி ஆட்டத்தில் 5 நடுவர்களை மகளிர்

சுருக்கம்:



- உலக கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறையாக, ஞாயிற் றுக்கிழமை தடைபெறும் மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்துக்கு 5 பெண்படுவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முக்கிய சிறப்பம்சங்கள்:

- பெருமைக் குரியவர்களில் ஒருவராக ஜி.எஸ். . ஜி.எஸ். லட் என்ற இந்தியரும் இணைந்திருக்கிறார்.
- வெர், ஐசியின் சர்வதேச ஆட்ட நடுவர் குழுவில் முதல் பெண் நடுவ ராக இணைந்து அசத்தியவர் என்பதும், ஆடவருக்கான ஒன்டே கிரிக் கெட்டில் நடுவராகச் செயல்பட்ட முதல் பெண் நடுவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.
- ஆஸ்திரேலியா–இங்கிலாந்து மோதும் இந்த இறுதி ஆட்டத்தின் பிரதான நடுவராக (ரெஃப்ரி வட்டம் செயல்பட இருக்கிறார்.
- தென்னாப்பிரிக்காவின் லௌரென் அகென்பக், நியூஸிலாந்தின் கிம் காட்டன் ஆகியோர், நடுவர்களாகவும் (அம்பயர்), மேற்கிந்தியத் தீவுகளின் ஜாக்குலின் வில்லியம்ஸ் தொலைக் காட்சி நடுவராகவும் (3ஆவது நடுவர்) பணியாற் றவுள்ளார்.
- ஜிம்பாப்வே யின் லாங்டன் ருசெர் +ஆவது நடுவரர், பஷ்மி இவர்களில் கிம்காட்டன், மகளிர் டி20 உலகக் கோப்பை போட்டியின் இறுதி ஆட்டத்தில் பணியாற்றிய ஒரே பெண் நடுவர்.
- ஜாக்குலின் வில்லியம்ஸ், ஆடவர் கிரிக்கெட்டில் 3–ஆவது நடுவராகச் செயல் பட்ட முதல் பெண் நடுவர்.
- கிரிக்கெட்டில் பாலினச் சமனிலையை கொண்டு வரும் ஐசிசியின் முன்னெடுப்புகளில் ஒன்றாக இந்த நடவடிக்கை அறியப்படுகிறது.
- இந்த உலகக் கோப்பை போட்டியில் பணியாற் றும் 15 போட்டி அதிகாரிகளில் 8 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது

# விளையாட்டு

## அல் ரிஹ்லா கால்பந்து

சுருக்கம்:



- அல் ரிஹ்லா என்பது FIFA உலகக் கோப்பைக்காக அடிடாஸ் உருவாக்கிய 14வது பந்தாகும்.
- அடிடாஸ் அல் ரிஹ்லாவை வெளிப்படுத்துகிறது – இது FIFA உலகக் கோப்பை கத்தார் 2022க்கான அதிகாரப்பூர்வ மேட்ச் பந்தாகும்.
- அடிடாஸ் FIFA உலகக் கோப்பைக்காக உருவாக்கிய 14 வது பந்தாகும், இது விமானத்தில் வேகமாகப் பயணிப்பதால் அதிக வேகத்தில் விளையாட்டை ஆதரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

முக்கிய சிறப்பம்சங்கள்:

- அரபு மொழியில் "பயணம்" மற்றும் கட்டிடக்கலை, சின்னமான படகுகள் மற்றும் கத்தாரின் கொடி ஆகியவற்றால் ஈர்க்கப்பட்டது.
- பந்து அதன் இதயத்தில் சுற்றுச்சூழலைக் கொண்டு வடிவமைக்கப்பட்டது – அனைத்து கூறுகளும் கவனமாக பரிசீலிக்கப்பட்டுள்ளன, மேலும் அல் ரிஹ்லா என்பது நீர் சார்ந்த மைகள் மற்றும் பசைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட முதல் உலகக் கோப்பை பந்து ஆகும்.
- தடிமனான, துடிப்பான வண்ணம் மற்றும் கிராபிக்ஸ் ஒரு முத்து பின்னணியில் அமைக்கப்பட்டுள்ளது
- உலகக் கோப்பை நவம்பர் முதல் டிசம்பர் 2022 க்கு இடையில் நடைபெறும், போட்டியின் குழு நிலைகளில் அவர்கள் யாரை எதிர்கொள்கிறார்கள் என்பதை அனைத்து அணிகளும் அறிந்து கொள்ளும்.
- மொத்தம் 32 அணிகள் போட்டியிடும், அதில் 29 அணிகள் உறுதி செய்யப்பட்டுள்ளன, மேலும் மூன்று இடங்கள் இன்னும் காலியாக உள்ளன.
- கத்தாரில் தனது பயணத்தைத் தொடங்கும் அல் ரிஹ்லா, உலகக் கோப்பையின் சிறந்த வீரர்களுடன் இணைந்து, கத்தார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியா, எகிப்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆர்வமுள்ள பெண் கால்பந்து வீராங்கனைகள் மற்றும் ஆஸ்பியர் அகாடமியைச் சேர்ந்த சில இளம் அடுத்த தலைமுறை வீரர்களைக் கொண்ட பலதரப்பட்ட திறமைகளின் கலவையால் ஆடுகளத்தில் இணைக்கப்படும்.

## ஒருநாள் கிரிக்கெட்டில் புதிய சாதனை படைத்த பாகிஸ்தான் கேப்டன்

சுருக்கம்:



- ஒருநாள் கிரிக்கெட்டில் குறைந்த இன்னிங்ஸில் 15 சதங்கள் அடித்த வீரர் என்கிற சாதனையைப் படைத்துள்ளார் பாகிஸ்தான் கேப்டன் பாபர் ஆஸம்
- லாகூரில் நடைபெற்ற ஆஸ்திரேலியா – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2-வது ஒருநாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது

முக்கிய சிறப்பம்சங்கள்:

- முதலில் பேட்டிங் செய்த ஆஸ்திரேலிய அணி, 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 348 ரன்கள் குவித்தது. பென் மெக்டர்மாட் 104, டிராவிஸ் ஹெட் 89, ஸ்டாய்னிஸ் 49 ரன்கள் எடுத்தார்கள்.
- ஷாஹீன் ஷா அஃப்ரிடி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பாகிஸ்தான் அணி அபாரமான முறையில் இலக்கை விரட்டி 49 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 349 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. இமாம் உல் ஹக் 106 ரன்களும் கேப்டன் பாபர் ஆஸம் 114 ரன்களும் எடுத்தார்கள்.
- ஃபகார் ஸமான் 67 ரன்கள் எடுத்து நல்ல தொடக்கத்தை அளித்தார். ஒருநாள் கிரிக்கெட்டில் பாகிஸ்தான் அணி விரட்டிய அதிகபட்ச இலக்கு இதுதான். இதற்கு முன்பு 2014-ல் வங்கதேசத்துக்கு எதிராக 329 ரன்கள் எடுத்து இலக்கை அடைந்தது.
- ஒருநாள் கிரிக்கெட்டில் குறைந்த இன்னிங்ஸில் 15 சதங்கள் அடித்த வீரர் என்கிற சாதனையைப் படைத்துள்ளார் பாபர் ஆஸம்.

- ஆம்லா இதற்கு முன்பு 86 இன்னிங்ஸில் எடுத்த சாதனையை 83 இன்னிங்ஸில் எடுத்து சாதித்துள்ளார்.
- ஒருநாள் கிரிக்கெட்: குறைந்த இன்னிங்ஸில் 15 சதங்கள் பாபர் ஆஸம் – 83 இன்னிங்ஸ் ஆம்லா – 86 இன்னிங்ஸ் விராட் கோலி – 106 இன்னிங்ஸ் வார்னர் – 108 இன்னிங்ஸ் தவன் – 108 இன்னிங்ஸ்.